யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# Sivayogar Swami Memorial Lecture – 2017

on

## சைவசித்தாந்த மெய்யியல் நோக்கில் யோகர் சுவாமிகள்

Prof. (Mrs.) A.N. Krishnaverney
Former Head / Fine Arts, Faculty of Arts,
University of Jaffna.

Kailasapathy Auditorium,
University of Jaffna.

16.06.2017

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## சிவயோகர் சுவாமிகள்
## நினைவுப் பேருரை - 2017



**சைவசித்தாந்த மெய்யியல் நோக்கில்**
**யோகர் சுவாமிகள்**

## பேருரை வழங்குபவர்

**பேராசிரியர்.(திருமதி) ஏ.என்.கிருஷ்ணவேணி,**
**முன்னாள் தலைவர், நுண்கலைத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# துணைவேந்தரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிவயோகர்சுவாமிகளினது மூன்றாவது நினைவுப் பேருரையினது ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

யாழ்ப்பாணப் பாரம்பரியத்திற்கும், சமய கலாசாரத்திற்கும் அருந்தொண்டாற்றிய சிவயோகர்சுவாமி அவர்கள், அகிலமும் வியக்கும் வண்ணம் அநுபூதிச்செல்வராக விளங்கியவர். சிவயோகர்சுவாமி அவர்கள் ஏறத்தாழ அரைநூற்றாண்டுக்கு மேலாக ஈழத்திருநாட்டிலே குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மலைநாடு, கொழும்பு ஆகிய இடங்களில் நடமாடி, தம்மை நாடி வந்த அடியார்களையும் அன்பர்களையும் தமது ஆத்மீக நற்சிந்தனைகளாலும் அருளுரைகளாலும் ஆத்மீக வாழ்விற்கு ஆற்றுப்படுத்தியவர்கள்.

சிவயோகர்சுவாமிகள் தீர்க்கமான ஆத்மீகப் பயிற்சியை செல்லப்பா தேசிகரிடம் பெற்றவர். சுவாமிகளின் ஆத்மீகச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர்கள் அவரைத் தங்கள் குருவாகப் போற்றி வணங்கினார்கள். சுவாமிகள் மேற்கொண்ட ஆத்மீகப் பணிகளையும் சிவத்தொண்டினையும் சிவதொண்டன் நிலையங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இத்தகைய சிறந்த ஆத்மீக ஞானியாகவும், குருபரனாகவும் விளங்கிய சுவாமிகளது நினைவுப் பேருரையினை இன்றைய தினம் நுண்கலைத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர்.அன்ரனி நோர்பேட் கிருஷ்ணவேணி அவர்கள் நிகழ்த்துவது பெருமகிழ்வளிக்கிறது. இந்நினைவுப் பேருரை சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்.

*பேராசிரியர். இ. விக்னேஸ்வரன்,*
*துணைவேந்தர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

# சைவசித்தாந்த மெய்யியல் நோக்கில் யோகர் சுவாமிகள்

பேராசிரியர்.(திருமதி) ஏ.என்.கிருஷ்ணவேணி,
நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பெருமதிப்புக்கும் பேரன்புக்குமுரிய வேந்தர் அவர்களே, துணைவேந்தர் அவர்களே எமது மதிப்பிற்குரிய பீடாதிபதிகளே, பேரவை உறுப்பினர்களே, பேராசிரியர்களே, துறைத் தலைவர்களே, சக விரிவுரையாளர்களே, கல்விசாரா உத்தியோகத்தர்களே, மாணவர்களே, ஆர்வலர்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்.

யாழ்ப்பாண சமய மரபில் மிகவும் புகழ்பெற்ற சிவயோகர் சுவாமிகளது நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையை நான் ஒரு கௌரவமாகவே கருதுகிறேன். யாழ்ப்பாணப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் ஆறுமுகநாவலருக்குப் பின் சைவசமயம், சைவசித்தாந்தத்தின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர் களுள் சிவயோகர்சுவாமிகள் மிக முதன்மையானவர். அத்தகைய ஒரு பெருமகனாரை நினைவு கூரச் சந்தர்ப்பம் கிட்டியமை ஒரு பெரும் பேறேயாகும். எனக்கு இத்தகைய சந்தர்ப்பத்தை வழங்கியமைக்குக் காரணமாக இருந்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். பேரவை உறுப்பினர்களுக்கும் மூதவை உறுப்பினர்களுக்கும் இந்த இடத்தில் எனது நன்றியினைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இந்த பேருரையினை ஆற்றுவதற்குப் பல்வேறு வழிகளிலும் உதவிய எனது துறைசார்ந்த விரிவுரையாளர்களுக்கும் ஏனையோருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நினைவுப் பேருரையினைக் கணனி வடிவமைப்புச் செய்துதவிய செல்வி அஜித்தா முருகமூர்த்திக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# சைவசித்தாந்த மெய்யியல் நோக்கில் யோகர் சுவாமிகள்

## அறிமுகம்

இந்து சமய, தத்துவ வரலாற்றில் சித்தர்களின் பங்களிப்புத் தனித்துவமான இடத்தைப் பெறுகிறது. அந்த வகையில் இந்தியாவில் வட இந்திய நவநாத சித்தர்கள், தென் இந்தியாவில் தமிழ்நாட்டுப் பதினெண் சித்தர்கள் பற்றி அறிய முடிகிறது. ஈழத்துச் சித்தர் பாரம்பரியத்துள் பலர் இலைமறைகாயாகச் செயற்பட்டு வந்துள்ளனரெனினும் அவர்களுள் சிலர் நன்கு அறியப்பட்டவர்களாகவும், போற்றத்தக்கவர்களாகவும் விளங்குகின்றனர். அவர்களுள் யோகர் சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர் தேரடிச் செல்லப்பா சுவாமிகளின் சீடராவார். செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமிகளின் சீடராவார். அவர் யாழ்ப்பாணத்திற் சித்தர் மரபில் குருசீட பரம்பரையை உருவாக்கிய ஆதிகுருவாகக் கருதப்படுகின்றார். யோகர் சுவாமிகளும் தமது 12 ஆவது வயதிற் கடையிற் சுவாமிகளைக் கண்டதாகவும், அவர் கரிய நிற ஆடையுடன் கக்கத்தில் ஒரு குடையையும் வைத்திருந்ததாகவும் கூறுகிறார். கடையிற்சுவாமிகள் என அழைக்கப்படும் முத்தியானந்தர் இந்தியாவில் கர்நாடகப் பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணம் வந்தவராக அறியப்படுகிறார். இவர்களுடன் இந்தியா முழுவதிலும் சித்தர்கள் பலர் வாழ்ந்திருந்தாலும், பொதுவான சமூக வாழ்க்கையில் இருந்து அவர்கள் விலகியிருந்தமையால் இலக்கியத்தில் இடம்பெறாமற் போயுள்ளனர். பொதுவாகவே உள்ளத்து ஆசைகளை உதறித்தள்ளி ஆன்மாவில் பூரண திருப்தி பெற்ற ரிஷிகள், ஞானிகள், சித்தர்கள் தம்மைப் பற்றிப் பிறருக்குக் கூறிப் பெருமை கொள்வதில்லை. இதனாற் சித்தர்கள் பற்றிய வரலாறுகள் சரிவரத் தெரியாமற் போயின. ஆயினும் காலத்துக்குக்காலம் அறிஞர்கள் பலர்

இவர்களைப் பற்றிய செவிவழிக் கதைகள் பலவற்றைக் கேட்டறிந்து நூல் வடிவில் சமூகத்திற்கு அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆத்மஜோதிப் பிரசுரங்கள் பல இவ்வாறு வெளியிடப்பட்டவையே. இந்தியாவைப் பொறுத்தமட்டில் பதினெண் சித்தர்கள் பிரபல்யம் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுள் முதல்வராகத் திருமூலர் விளங்குகிறார். மறைஞான மேதையாகத் திருமூலரைக் கொள்வது வழக்கம். அவரது பரம்பரையில் தமிழ்நாட்டிற், பதினெண் சித்தர்கள் மறைஞானத்தை வளர்த்ததாக அறிய முடிகிறது. திருமூலர், இராமதேவர், கும்பமுனி(அகத்தியர்), இடைக்காடர், தன்வந்திரி, வான்மீகி, கொங்கணர், நந்திதேவர், பாம்பாட்டிச் சித்தர், சட்டைமுனி, குதம்பைச் சித்தர், சிவவாக்கியர், பட்டினத்தார், பத்திரகிரியார், அகப்பேய்ச் சித்தர், அழுகணிச் சித்தர், கடுவெளிச் சித்தர், காகபுசுண்டர் போன்றோர் ஆவார். ஆனால் சித்தர்கள் பதினெண்மருக்கும் மேற்பட்டவர்கள் எனவும் கூறப்படுகிறார்கள். சைவ அடியார்களுட் பலர் சித்தர்களே. திருவிசைப்பா பாடியவர்களுள் ஒருவரான கருவூர்த்தேவர், திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் போன்றோரைக் குறிப்பிடலாம். தாம் வாழ்ந்த இடங்களின் பெயர்களினாலும் சித்தர்கள் அறியப்பட்டிருந்தனர். உதாரணமாகப் பட்டினத்தார், கொங்கணர், இடைக்காடர் போன்றோரைக் கூறலாம். இவர்கள் சாதி, சமயத்திற்கு அப்பாற்பட்டவர்கள். மூடநம்பிக்கைகளைக் கண்டித்தவர்கள். மனித வாழ்வை உயர்வாகக் கருதியதுடன் மனத் தூய்மைக்கு முதன்மை கொடுத்தவர்கள். சித்தர் பாடல்களை மறைஞானப்பாடல் இலக்கியப்பண்புடன் சேர்த்து பார்க்க வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்படுகிறது (சிவத்தம்பி, 1999, பக். 28). இங்கு நாம் கவனிக்க வேண்டியது சித்தர்பாடல்கள் முனைப்பு பெறுகின்ற காலகட்டத்திற் தான் (1415) சைவ சித்தாந்த சாஸ்திரங்களும் தொகுப்புப்பெறுகின்றன. சைவம், சித்தாந்தம் எனும் கருத்தியலாக (System of Ideas) வரும் நிலையில் மத அனுபவப் பாடல்கள் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஒரு சித்தர் பரம்பரை மக்களோடு மக்களாக வாழ்ந்து அவ்வப்போது தமது அருளனுபவங்களை வெளிப்படுத்தி மக்களைச் சமய, ஒழுக்கநெறிகளில் வாழ வழிவகுத்தமையை அறிய முடிகிறது. சுப்பிரமணிய பாரதியார் தம்மை ஒரு சித்தன் என்று கூறுவதோடு யாழ்ப்பாணத்துச் சித்தர் பற்றியும் கூறியிருப்பது கவனத்திற்கொள்ளத்தக்கது.

"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்"

என்று கூறிச் செல்கிறார். யாழ்ப்பாணச்சாமி பற்றிப் பாரதி தனது பாடலில் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

"குவலயத்தின விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்
தேவிபதம் மறவாத தீர ஞானி
சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாவான்
பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி
பரமபதவாயிலெனும் பார்வையாளன்
காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கனிகள்சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன" (பாரதி, 66)

என்று தான் புதுவையிற் கண்ட ஒரு யாழ்ப்பாணத்துச் சுவாமியைப் பற்றி பாடியுள்ளார். அந்தவகையில் யாழ்ப்பாணச் சித்தர்கள் தமிழகத்திலும் அறியப்பட்டவர்களாகவும், புகழ்பெற்றவர்களாகவும் இருந்துள்ளனர் என்பது தெளிவு. கடையிற் சுவாமிகள் (1819), செல்லப்பா சுவாமிகள், சிவயோக சுவாமிகளுடன் சித்தானைக்குட்டி, பெரியானைக்குட்டி (இந்தியாவிலிருந்து வந்தவர்கள்) போன்ற பல்வேறு சித்தர்களின் வாழ்க்கை பற்றி அறியலாம். மேலும் சின்னத்தம்பி சுவாமிகள் (சார்ஜன்ட் சுவாமி -1908) குழந்தைவேற் சுவாமிகள், பெரிய சந்நாசியார் (1860-1917), கனகரத்தினம் சுவாமிகள் (1922), இராமநாதர் அருளம்பல சுவாமிகள் (1865-1925), மகாதேவ சுவாமிகள்(1874-1942), சி.வே.அருளம்பல சுவாமிகள் (1880-1942), முத்துக்குமார சுவாமிகள் (1949), கடப்பைச்

சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள், பொன்னையன் சுவாமிகள் (1920-1979), செல்லாச்சி அம்மையார் (1863-1929), சடையம்மை (1865-1936) போன்றோரைக் கூறலாம். இத்தகைய சித்தர்களுள் சிவயோக சுவாமிகள் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவராகவும், சிவ தொண்டன் நிலையத்தினூடாக சமய, தத்துவ ரீதியான தொண்டுகளையும், சமய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளையும் மக்களுக்கு எடுத்துக் காட்டியவராகவும் விளங்குகிறார். அவர் சமயங்களுக்கிடையே சமரசத்தைப் பேணிய ஒரு ஞானியாக இருந்ததுடன், தனது சமயமாகிய சைவ சமயத்தையும், சைவ சித்தாந்தத்தையும் சிறப்பாகப் பின்பற்றியதோடு மக்கள் மத்தியிலும் அவற்றை இலகுவாக எடுத்துரைத்து வளர்த்தவராகவும் விளங்குகிறார். யாழ்ப்பாணத்திற் சித்தர் பரம்பரையானது இறுக்கமான முறையில் வளர்ச்சிபெற்று வந்ததென்றோ, அவர்களது சிந்தனைகள் முழுமையாக மக்களை அடைந்தனவென்றோ கூறுவது கடினம்.

யோகர் சுவாமிகளின் சமய நோக்கு பற்றி விரிவாக நோக்கும் முன்னர் சித்தர்கள் என்போர் யார்? அவர்களது சமயம் எத்தகையது? என்பது பற்றி அறிவது மிகவும் பொருத்தமானது.

## சித்தர் என்போர் யார்?

சித்தர்கள் பற்றி நம் மத்தியில் நிலவுகின்ற கருத்துக்களையும், சித்தர் என்போரின் செயல் முறைகளையும் நோக்கும் போது சித்தர் யார்? என்ற வினாவுக்கு விடை கூறுதல் சற்றுக் கடினமானது என்றே தோன்றுகின்றது. பொதுவான வரைவிலக்கணத்தை நோக்கும் போது "சித்துக் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள்" என்று கூறப்பட்டுள்ளது. சித்துக்கள் எட்டு வகைப்படும் என சமய நூல்கள் கூறுகின்றன. இவற்றை அட்டமா சித்திகள் என்று அழைப்பர்.

அவை:

அணிமா – சிறியவற்றுள் மிகச் சிறியதாதல்
மகிமா – பெரியவற்றுள் மிகப் பெரியதாதல்
லகிமா – எடை குறைந்து பாரமில்லாதனவாக ஆகுதல்
கரிமா – ஐம்புலத்தொடர்பிலிருந்து விடுபடல்

| | | |
|---|---|---|
| பிராத்தி | – | வேண்டியவற்றை வேண்டியவாறு பெறுதல் |
| பிராகாமியம் | – | இச்சாசக்தி மிகப் படைத்திருத்தல். நினைப்பின் வன்மையால் எல்லாவற்றையும் படைக்கும் ஆற்றல் |
| ஈசத்துவம் | – | இறைவனைப் போன்று அனைத்தையும் ஆக்குந்திறமை வாய்க்கப் பெற்றிருத்தல் |
| வசித்துவம் | – | பிறரைத் தன்வசப்படுத்தல் |

சிலப்பதிகாரம் நாடுகாண் காதையில் சித்தர் என்ற சொல்லுக்கு கிருத்தியன், செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடித்தவன், கன்மங்களைக் கழுவியவன், எண் வகைச் சித்துக்களை உண்டாக்கியவன் என்று அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார். சித்தர்களைக் குறிக்கும் சீவன் முத்தர்கள் என்ற பதமும் முக்கியத்துவம் பெறுகிறது. திருவிளையாடற் புராணத்தில் அட்டமா சித்துப் படலம் என்ற பகுதியில் சித்தர்களின் சித்து 64 என்று கூறப்படுகின்றது. சித்து என்றால் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல் என்று அறிய முடிகின்றது. சித்தர்கள் தங்களிடமுள்ள இயற்கைக்கு மீறிய ஆற்றல்களால் மனித உடலின் பல்வேறு உறுப்புக்களின் இயல்பு, அமைப்புப் பற்றியும், அவை அடையும் நோய் பற்றியும் அறிந்து இருந்தனர். இவ்வாறு பல்வேறு வழிகளிலும் அறிவு பெற்றவர்களாகவும், யோகப் பயிற்சிகளில் வல்லவர்களாகவும் இருந்துள்ளனர். இவை அவர்களது ஆன்மீகப் பயணத்தின் இடையே கிடைக்கும் நற்பேறுகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆனால் சித்துக்கள் கைவரப் பெறுவதே சித்தர்களின் முழு முதற் குறிக்கோள் என்பது பொருத்தமானதல்ல. தாயுமானசுவாமிகளும் தமது பாடலில் பதினொருவகைச் சித்துக்கள் பற்றிக் கூறி அவற்றைப் பெற்றாலும் சிந்தையை அடக்கிச் சும்மா இருப்பது அரிதென்று அப்பாடலை முடிக்கின்றார். எனவே சித்துக்கள் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள் என்று கூறுவதைவிடச் சிந்தையை அடக்கி சும்மா இருக்கும் நிலையை

அடைந்தவர்கள் சித்தர்கள் என்று கூறுவது பொருத்தமானது. சித்தர்கள் கைக்கொண்ட யோகமார்க்கம், வாசியோகம் என்றழைக்கப்படும். சுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு சுவாசத்தை அடக்கி சித்திகள் கண்டவர்கள் சித்தர்கள். உடலைத்திடமாக வைத்து நீண்டநாள் வாழக்கூடிய வைத்திய நெறிகளைப் பின்பற்றினர். இதுவே சித்தர் வைத்தியம் எனப்படுகிறது.

சித்த (Siddha) எனும் வடமொழிப் பதம் "நிறைவேறியமை, பெறப்பட்டமை, ஈட்டப்பட்டமை" என்பவற்றைக் குறிக்கும். எனவே சித்தர் என்போர் உயர் இலக்கை அடைந்தோர் என்று பொருள் கொள்ளலாம். தமிழக இலக்கியப் பாரம்பரியத்தில் திருஞான சம்பந்தரது முதற் திருமுறையில் (பதிகம் 48 – திருக்கற்குடி) பக்தர் மரபு, சித்தர் மரபு என்ற இரு மரபுகள் பேசப்பட்டுள்ளமையை சிவத்தம்பி (1999, பக்.25) எடுத்துக் காட்டுகிறார்.

> "ஒத்துயர் பக்தர்கள் சித்தரிறைஞ்ச அவரிடரெல்லாங்
> காத்தவர் காக்குசோலை கற்குடி மாமலையாரே"

என்று அப்பாடல் அமைகிறது.

**சித்தர்களின் சமயம்**

சித்தர்கள் ஒருகடவுட் கொள்கை உடையவர்கள். பல கடவுள்கள் பற்றிப் பல சித்தர்களும் பேசியிருந்தாலும் இறுதியில் ஒரு தெய்வக் கொள்கையையே முன் வைத்தனர். சிவவாக்கியர் "அங்கும் இங்கும் ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ" (பாடல் 128) எனவும் "அண்டமெலாம் ஒன்றதாய் பெரிதாகி உலகுதன்னில் நின்றபாதம் ஒன்றல்லோ" (பாடல் 219) என்றும் பாடுகிறார். இடைக்காடரும் 'ஆறாதாரத் தெய்வங்களை நாடு, அவர்க்கு மேலான ஆதியைத் தேடு' என்று பாடுவது குறிப்பிடத்தக்கது. ஆனால் சமய வழிபாட்டு

முறைகளில் மக்களுக்குள்ள மூடநம்பிக்கைகளுக்கு சித்தர்கள் இடம் கொடுக்கவில்லை. தன்னுள் உறைந்துள்ள இறைவனை அறியாது புறஉலகில் இறைவனைத் தேடும் மூடர்கள் தம்காலத்தை வீணே கழிப்பதாகக் கூறினர். சுட்டசட்டியும் சட்டுவமும் அதிற் சமைக்கப்பட்ட கறியின் சுவையை அறியாதது போல நம்முள் இருக்கும் இறைவனை நாம் அறிவதில்லை. உள்ளத்தால் வழிபடும் அகவழிபாடே சித்தருக்குரியது. உள்ளத்தில் உறைகின்ற இறைவனை உள்ளத்தால் வழிபட்டுப் பெறுகின்ற இறையின்பமே நித்தியமானது. அத்தகைய இன்பத்தை வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாது என்பதே அவர்களின் கருத்து "உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பாலயம் " என்று திருமந்திரம் கூறுவது குறிப்பிடத்தக்கது. பக்தி நெறியிலுள்ள போலித்தனத்தைச் சாடுவதும் யோக, ஞான மார்க்கங்களைப் போற்றுவதும் சித்தர்நெறியின் பொதுப் பண்பாகவுள்ளது. அந்தக்கரணங்களான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கினுள் சித்தத்தை ஒடுக்கி, ஒருமுகப்படுத்தி செய்ய வேண்டிய வழிபாடுகளின் மூலம் ஆன்ம விடுதலை பெறுவதே அவர்களது குறிக்கோள்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் சித்தர்கள் பலரும் பல்வேறு பட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இந்திய தத்துவங்கள் பலவற்றின் கருத்துக்களைச் சித்தர்களின் பாடல்களிற் காணலாம். ஆனால் யாழ்ப்பாணத்துச் சித்தர்கள் சைவசமயத்திற் செல்வாக்குச் செலுத்துகிற சைவசித்தாந்தக் கொள்கைகளின் தாக்கத்திற்குட்பட்டவர்களாகவே காணப்படு கின்றனர். அந்தவகையில் யாழ்ப்பாணத்துச் சித்தர்களில் பெரும் புகழ்பெற்றவராகக் கருதப்படுகின்ற யோகர் சுவாமிகளும் சைவசித்தாந்தக் கொள்கைளை முன்வைத்தவராகவே காணப்படுகின்றார்.

அதி உயர் குறிக்கோளான முத்திநிலையை அடைய, பொதுவாக சமய அடிப்படையில் இரு வழிகள் உள்ளன. குறிப்பிட்ட ஒரு சமயத்தின், பிரமாணங்களாகக் கொள்ளப்படும் நூல்கள், சாத்திரங்கள், அவை விதிக்கும் விதிமுறைகளினின்றும் வழுவாமல் அறிவு பூர்வமாக மெய்ப்பொருளை அடைதல் ஒன்று. மற்றையது குறிப்பிட்ட ஒரு சமயத்தைச் சார்ந்து அவை விதிக்கும் சடங்கு, சம்பிரதாயம், கிரியை நெறிகளிலும் பார்க்க சுவானுபவமும் உள்ளுணர்வும் காட்டும் அனுபூதி நெறிவழியே நின்று உணர்ச்சிபூர்வமாக இறைவனை அடைதல் ஆகும். சைவசித்தாந்தம் சமயாசாரியர், சந்தானாசாரியர் வழி வந்தமையும் கவனத்திற் கொள்ளத்தக்கது. திருமூலர் தொடக்கம் இராமலிங்கர் வரை பல மறைஞானிகள் சமயங்களின் பொதுப் பண்புகளைப் போற்றி ஞானத்தையும் அனுபூதி மார்க்கத்தையும் சமரசமாகப் பேணி வந்துள்ளனர். பிரமாணாதீதநிலையில் நின்ற ஞானியர்களுள் தமிழ்நாட்டுச் சித்தர்களுக்குத் தனியான இடமுண்டு இவர்கள் மனிதர்கள் வரையறுத்த விழுமியங்களையும் சடங்குகள் சம்பிரதாயங்கள், சாதி, குலம், பிறப்பு, அந்தஸ்து ஆகியவற்றையும் கடந்தவர்கள. இந்த அடிப்படையில் ஈழத்துச் சித்தர்களது சாதனைகளும் இடம்பெற்றுள்ளன. சித்தர்கள் சித்தாந்த வேதாந்த பேதங்களுக்கு அப்பாற்பட்டவர்களாகவும், அவற்றுக்கிடையே சமரசம் கண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். யாழ்ப்பாணச் சமூகத்தில் சைவசித்தாந்தம் பெருநெறியாக இருந்தாலும் சித்தர்கள் பலர் வேதாந்த சாஸ்திர ஆராய்ச்சி கைவரப்பெற்றவர்களாக இருந்துள்ளனர். இது நமது சமயத்தின் ஆன்மீக வாழ்க்கையின் பன்முகப்பாட்டையும், தத்துவ வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது. சுவாமி சின்மயானந்தர் பரம்பரையில் வந்தவர்கள் சார்ஜன் சுவாமி பரம்பரையினர். இவர்கள் கந்தர்மடத்து வேதாந்த மடத்தைச் சேர்ந்தவர்கள். நமது சிவயோக சுவாமிகள் ஒரு சமரச ஞானி. எல்லாச் சமய

உண்மைகளையும் அறிந்தவர். ஆனால் தம்மை ஒரு சிவதொண்டன் என்றே கூறுவர்.

**யோகர் சுவாமிகளின் சமயப் பின்புலம்:**

**வேதாந்த செல்வாக்கு**

இலங்கை காலனித்துவ ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த காலத்திற் சைவ மக்கள் தம் சமய அனுஷ்டானங்களைப் பின்பற்ற முடியாத சூழலில் இருந்தனர். (ஏறக்குறைய கி.பி 1500 ஆம் ஆண்டிலிருந்து 150 வருடங்கள் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழும் பின்னர் 150 ஆண்டுகள் வரை ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்டும் இருந்த காலப் பகுதிகள் சைவ சமயத்தைப் பொறுத்தமட்டில் இருள் சூழ்ந்த காலமாகவே காணப்பட்டது. இந்நிலையில் கி.பி 1800 அளவில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டதுடன் சைவ சமயத்தின் மீதுள்ள தடைகள் ஓரளவு தளர்த்தப்பட்டன. இதுவே சைவ சமய மறுமலர்ச்சிக்கு வழிகோலியது. இருள் சூழ்ந்த அக்காலப் பகுதியில் நாவலரின் பங்களிப்பும் பணியும் சைவ சமயத்திற்கு மீண்டும் புத்துயிரளித்தது. சைவ சமய மறுமலர்ச்சியில் நாவலரை அடுத்து முக்கியத்துவம் பெறுபவர் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார். இவரால் நிறுவப்பட்டதே இந்து வித்தியாவிருத்திச் சபை (Hindu Board of Education). இச்சபை பல சைவப் பாடசாலைகளை நிறுவியமை குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதியில் சைவசமயசாரம், திருவருட்பயனுரை, சைவபோதம், சைவக்கிரியை விளக்கம் போன்ற நூல்கள் தமிழிலும், 'Glories of Saivism, Saiva School of Hinduism' ஆங்கிலத்திலும் சிவபாத சுந்தரனாரால் எழுதப்படடன. து. ஆ. நல்லசுவாமிப்பிள்ளையின் சிவஞானசித்தியார் ஆங்கில மொழிபெயர்ப்பும் இக்காலப் பகுதியில் வெளியிடப்பட்டது. சைவ சமய மறுமலர்ச்சிக்கு உதவிய ஏனைய அறிஞர்களாக சுவாமி விபுலானந்தர், கொக்குவில் சபாரத்தின முதலியார் போன்றோரைக் குறிப்பிடலாம்.

சபாரத்தின முதலியார் 'Essentials of Hinduism' எனும் ஆங்கில நூலை வெளியிட்டார். பிற சமயத்தவர்கள் சைவத்தின் மீது விடுக்கும் கண்டனங்களுக்குப் பதிலாகவும் மறுப்பாகவும் இந்நூல் அமைந்துள்ளது. வழக்கறிஞரான சேர்.முத்துக்குமாரசுவாமியும், சேர்.பொன்.இராமநாமன் அவர்களும் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தமை அனைவரும் அறிந்ததே.

யாழ்ப்பாணத்தில் சைவ மறுமலர்ச்சியை ஏற்படுத்திய ஆறுமுக நாவலருக்குப் பின்னர் சைவப் பெருமக்களால் மிகவும் போற்றப்பட்டவர் யோகர் சுவாமிகள் என்பதை நாம் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். அவர் சைவ சமயத்தைப் பேணுவதிற் கண்டிப்பானவராக இருந்ததுடன் தத்துவப் பூசல்களுக்குள் அகப்படாதவராகத் தத்துவாதீதராகவும் இருந்தார். வேதாந்தம், சித்தாந்தம் என்ற இருமைக்கும் அப்பால் நடந்து செல்லத் தமது அநுபூதிநெறியைப் (Mystical path) பயன்படுத்தி அதில் வெற்றியும் பெற்றார்.

வேதாந்தம் சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந் தொருக்கால் விழுந்து கும்பிட
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போகுமே.

(நற்சிந் 65)

வேதாந்த சித்தாந்தங்களை வெறுமனே படித்தும் தற்கித்தும் இதுபொருள், இதுபொருள் என்று வாதாடியும் ஒருபயனுமில்லை. ஆத்ம ஞானம் தர்க்கத்தால் வருவதல்ல என்பதே உண்மை. வேதாந்தம் சித்தாந்தம் என்ற இருமை 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் மேனாட்டார் வழிகண்டறிந்ததோ அல்லது சங்கராச்சாரியார் காலத்திற் தோன்றி வளர்ந்ததோ அல்ல. திருமூலர் திருமந்திரத்திலேயே வேதாந்தம் சித்தாந்தம் என்று

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. யோகர் சுவாமிகளிடம் அதிகம் ஈடுபாடு கொண்ட வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபராக இருந்த திரு.அம்பிகைபாகன் ஒருமுறை டி.எம்.பி.மகாதேவனுக்கு எழுதிய கடிதத்தில் "நாம் இராமகிருஷ்ண பரமஹம்சரைக் காணவில்லை. இப்போது யாழ்ப்பாணத்தில் இருக்கும் யோகர் சுவாமிகள் பல சமயநெறிகளும் இறுதியில் இட்டுச்செல்லும் சர்வசமய சமரசத்தை வாழ்வில் அனுசரிப்பவராகக் காணப்படுகின்றார். அவர் வயோதிபம் அடைந்துவிட்டார். அவரை வாழ்நாளிற் கண்டு ஆத்மீகத் திருப்திபெற (Spiritual Satisfaction) வேறு சந்தர்ப்பம் கிடையாது. ஒரு முறை வந்து போகவும் என்று வற்புறுத்தியமை கவனத்திற் கொள்ளத்தக்கது. இதனை ஏற்றுக் கொண்ட மகாதேவன் யாழ்ப்பாணம் வந்து ஆங்கிலத்திலும், தமிழிலும் விரிவுரைகள் நிகழ்த்தியதாகவும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் முன்வரிசையிலிருந்து கேட்டதாகவும் அவரது நண்பர் அச்சுவேலி மு.வைத்தியலிங்கம் உடனிருந்ததாகவும் அறியமுடிகிறது. மறுநாள் அம்பிகைபாகன் வீட்டில் அனைவரும் சந்தித்த வேளை மு.வைத்தியலிங்கம் "யாழ்ப்பாணத்தில் ஒருபுறம் கந்தபுராண கலாசாரம் வளர்ந்தாலும் மற்றொரு புறம் ஒரு சில கூட்டத்தார் தமிழ் வேதாந்த நூல்களான கைவல்லிய நவநீதம், பகவத்கீதை போன்ற நூல்களை வாசித்து அறிவு பெறுவோராக இருக்கின்றனர் என்பதை எடுத்துக்கூறினார். மேலும் வேதாந்த மடம் நிறுவப்பட்டமையும் இந்த இடத்தில் கவனத்திற் கொள்ளத்தக்கது. ஆனால் நூற்கல்வியும், தத்துவ வாதமும் மனிதனை ஆன்மீக உயர்வுக்கு அதிகம் இட்டுச் செல்லாது என்பதுவும் அனுபூதியே முக்கியமானது என்ற கருத்தும் வேதாந்திகள் சித்தாந்தி களுக்கிடையே ஊடுருவி இருந்தமை மிகமுக்கியமானது. இந்தியாவிலிருந்து வந்தோரும், இம்மண்ணையே பிறப்பிடமாகக் கொண்டோரும் மக்களைப் பெரிதும் அனுபூதிநெறிக்கே இட்டுச் சென்றனர். இத்தகையவர்களுள் சிவயோகர் சுவாமிகள் மிகவும் குறிப்பிடத்தக்கவராக விளங்குகிறார்.

வேதாந்தக் கொள்கைகளை விளக்கிய சுவாமி விவேகானந்தரது யாழ்ப்பாண வருகை (24.01.1887) மிகவும் பிரபல்யம் பெற்ற காலப்பகுதியிற்தான் யோகர் சுவாமிகளது அறிவுரைகள் நற்சிந்தனை எனும் தொகுப்பில் வெளிவரத் தொடங்கின. வேதாகம சாரமாகவும், தேவார திருவாசகத்தின் பிழிவாகவும் விளங்கிய நற்சிந்தனை சைவ மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கியது. இது இலகுவான செய்யுள் நடையிலும் உரைநடை வடிவிலும் உள்ளது. இத்தகைய விளக்கங்கள் யோகர் சுவாமிகளின் காலப்பகுதியில் சைவசித்தாந்தம் மட்டுமன்றி வேதாந்த தத்துவமும் சிறந்த நிலையிலையே இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. யோகர் சுவாமிகள் வேதாந்தக் கொள்கைகளை ஆதரித்தவராக இருந்தாலும் சைவசித்தாந்தக் கொள்கைகளையே வலியுறுத்தியராவர்.

இந்துதத்துவப் பிரிவுகளில் ஒன்றான வேதாந்தம் சைவ சித்தாந்தத்தோடு எதிர்ப்பின்றி வளர்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுவாமி விவேகானந்தரின் சீடர்களில் ஒருவரான அலெக்சாண்டர் என்பவர் எழுதிய “In the Hours of Meditation” எனும் நூலை யோகர் சுவாமிகள் “தியானகாலம்” என மொழிபெயர்ப்பித்து 1925 இல் வெளிவரும்படி செய்தார். 1955இல் விவேகானந்தரது சொற்பொழிவுகளின் சாரம் எனும் சிறு பிரசுரத்தை சிவத்தொண்டன் வெளியீடாக வெளிவரச் செய்தார். சிவத்தொண்டனில் சைவ சித்தாந்தக் கொள்கையை விளக்கும் கட்டுரைகள் வெளிவந்ததுபோல் வேதாந்தக் கட்டுரைகளும் வெளிவந்தன என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். உதாரணமாக, கலைப்புலவர் நவரட்ணம் அவர்கள் எழுதிய “அத்துவைத வேதாந்தம்” பற்றிய கட்டுரை, சங்கராச்சாரியாரது விவேக சூடாமணி தமிழ் மொழிபெயர்ப்பு போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். மேலும், யோகர் சுவாமிகளது வேதாந்த

சித்தாந்த சமரசம் பற்றிய கருத்துக்களையும் அவரது நற்சிந்தனையிற் காணலாம்.

"விருப்பும் வெறுப்பும் வீணெனக் குறிப்போம்
வேதாந்த சித்தாந்தஞ் சமமெனத் தெரிப்போம்" (நற்.சிந்.33)

நாம் இந்த இடத்தில் தெளிவுபடுத்த வேண்டிய கருத்து யாதெனில் கிரியை சம்பந்தமான விடயங்களிற் சமயங்களுக்கிடையே பேதங்கள் காணப்பட்டாலும் ஆன்மீக இலட்சியம் என்ற வகையில் ஒருமைப்பாடே காணப்படுகிறது என்பதாகும். சிவ புண்ணியத் தெளிவில் இருந்து எடுத்துக் காட்டப்பட்ட பாடல் இதனை உணர்த்துகின்றது.

சீவனை சிவத்தினொன்றாய்ச் சேர்க்கும் சித்தாந்தத் தோர்க்கும்
சீவனைப் பரத்தினொன்றாய்ச் சேர்க்கும்
பாவனை இரண்டுமொன்றே பரம ஞானத்தோர்க்கெல்லாம்
மேவிய கரும காண்டம் விளம்பிடிற் பேதமே

ஆறுமுக நாவலருக்குப் பின் அவர் வழிவந்தோர் வேதாந்த எதிர்ப்பில் முனைப்புக் காட்டவில்லை என்பது உண்மையே. யோகர்சுவாமிகள் கூட சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வருகையின் போது சுவாமியின் தரிசனத்தைப் பெற்றதோடு அவரது சொற்பொழிவையும் கேட்டார் என்று அறிய முடிகிறது. சுவாமி ஏறி வந்த வண்டியை யோகர் சுவாமிகள் இழுத்ததாக சுவாமி சித்ருபானந்தா ஒரு கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார். (ஆத்மீகமும் யாழ்ப்பாண மக்களும், தமிழோசை, லண்டன் 31.07.1992, பக்.15) விவேகானந்தர் பேசிய பேச்சின் தொடக்கத்தில் "விடயம் பெரிது, காலமோ குறுகியது" (the subject is vast but time is short) என்று கூறிய வார்த்தைகளை யோகர் சுவாமிகள் அடிக்கடி தமது அன்பர்களிடையே பேசி மகிழ்வார் என்றும் அறிய முடிகின்றது.

(சிவத்தொண்டர், 1991 பக். 17). சுவாமி விவேகானந்தரது போதனைகளும் இராமகிருஷ்ண இயக்கத்தின் செய்திகளும் தமிழ் இந்துக்களை வெகுவாகக் கவர்ந்தன. இவ்வாறு வேதாந்நக் கொள்கைகளிலும் ஈடுபாடு கொண்டவராக வாழ்ந்தார். ஆயினும் நடைமுறையில் சைவசித்தாந்தியாகவே வாழ்ந்ததுடன், தமது நற்சிந்தனையின் மூலம் சைவசித்தாந்தக் கொள்கைகளைப் பரப்பினார். அவரது மகாவாக்கிய விளக்கங்களும் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. சைவசமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவரான சிவயோகர் வேத, உபநிடத உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு தத்துவ விளக்கங்களை முன்வைத்துள்ளார்.

சீவபோத ஒழிவிலேயே முத்தி கிட்டுகிறது என்பது சித்தாந்த வேதாந்தக் கொள்கை. இந்த சமரச ஞானத்தின் அடிப்படையில் யோகர் சுவாமிகள் "சர்வம் பிரமமயம் எனில் ஒரு பொல்லாப்பும் இல்லை. நீ அன்றும் இன்றும் பரிபூரண சச்சிதானந்த சொருபியாய் இருந்திருக்கிறாய். எனவே நீ புதிதாக பூரணத்துவத்தை அடையப் போவதில்லை. நீ என்றும் பூரணனே.. உன் பூரணத்துவம் எப்பவோ முடிந்த காரியம். அப்படியுள்ள காரியம் சிந்தனாதீதம். நாம் அறியோம். அனைத்தும் சத்தாக இருப்பதனால் முழுவதும் உண்மை. அனைத்தும் ஆனந்தம். ஆதலினால் எங்கும் பரிபூரண ஆனந்தம்" என்று தமது குருவின் வார்த்தைகளுக்கு விளக்கமளித்துள்ளார். அதாவது செல்லப்பா சுவாமிகள் போதித்த

1. எப்பவோ முடிந்த காரியம்
2. நாம் அறியோம்
3. ஒரு „பொல்லாப்புமில்லை
4. முழுவதும் உண்மை

என்ற மகா வாக்கியங்களுக்கே சுவாமிகள் மேற்கூறியவாறு

விளக்கமளித்துள்ளார். எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த பரப்பிரமத்தை மனம்மொழி மெய்களாற் போற்றவேண்டும் என்பதே அவரது கொள்கை. சன்மார்க்கம் ஒன்றே யானறிந்த நன்மார்க்கம். சத்தியமாகச் சொல்கிறேன் சர்வமும் இதுவே. என்செயல் என்பது அறியாமை. அவன் செயல் என்பது ஞானம் என்று அருள் ஞான அனுபவத்தை வெளிப்படுத்துகின்றார். இந்த மகா வாக்கியங்கள் பற்றிய விரிவான பதிவுளை யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களிற் காணமுடிகின்றது. சுவாமிகள் சிவசொருபியாகப் பத்மாசனமிட்டு மான்தோல் மீதமர்ந்து நிஷ்டை நிலையில் இருப்பது வழக்கம் இவரது சீடர்களில் ஒருவர் கலை வரலாற்று ஆசிரியாரகக் கருதப்படும் கலைப்புலவர் நவரட்ணம் ஆவார். அவர் சுவாமிகளது பூசைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொடுப்பவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

யோகர் சுவாமிகள் சுத்தமான சைவசித்தாந்தக் கொள்கைகளையே பெரிதும் ஆதரித்தவர். (செல்லப்பா, 1999,பக்.194). ஆதிசங்கரரது மாயாவாதக் கொள்கையை மறுத்துரைத்ததுடன் பக்குவ நிலையை அடையும் போது உண்மை விளக்கம் பூவினிற் கந்தம் உள்ளிருந்து பரிமளிப்பது போல சுயமாகவே பெறப்படும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார். இத்தகைய யோகர் சுவாமிகளின் அனுபவம் நமக்கு ஏற்படும் போது அவரது நற்சிந்தனைகளும் விளக்கமுறும் என்பதில் ஐயமில்லை.

## மகாவாக்கியங்களினூடாக வெளிப்படுத்தப்படும் சைவசித்தாந்தக் கருத்துக்கள்

### சும்மா இரு

இன்பமும் துன்பமும் உலக இயற்கை. அவற்றைப் பார்த்துக் கொண்டு சும்மா இரு. அங்கும் இங்கும் ஓடாதே. நிலையாக இரு. அன்பே கடவுள். சத்தியமே கடவுள். கடவுளை உணர்தல்

வேண்டும். கண்ணாற் காணுவதல்ல, எல்லாம் எங்கும் கடவுள். வணங்குவதும் வணங்கப்படுவதும் ஒருபொருளே. பகவத்கீதை 3ஆம் அத்தியாயம் 1ஆம், 2ஆம் சுலோகங்களை அடிப்படையாகக் கொண்டு மனதின் அசைவே கர்மம். அசைவின்றி இருந்தால் கர்மம் இல்லை என்பதே உண்மை என்று கூறப்படுகிறது. "சும்மா இரு" என்ற வாக்கியத்தை நோக்கின் உண்மையில் ஆன்மா சும்மா தான் இருக்கிறது என்பது புரியும். "சும்மா இருக்கின்ற திறனரிது" என்று தாயுமானவர் கூறுவது குறிப்பிடத்தக்கது. யோகர் சுவாமிகளும்

சும்மா இருக்கின்ற சூட்சம் நீ
சும்மா இருக்கின்ற சூட்சம் நான்
சும்மா இருக்கின்ற சூட்சமே எல்லாம்

என்று கூறுகிறார்.

பலவீனம் தேகத்திற்கும் மனத்திற்குமே அல்லாமல். ஆன்மாவுக்கு எந்நேரமும் பலந்தான். மனிதன் மரணத்திற்கு அப்பாற்பட்டவன். மேலும் அறிவு அறியாமை இரண்டும் நாமல்ல.

யோகர் சுவாமிகளது குருவாகிய செல்லப்பா சுவாமிகள் சில ஆண்டுகளாக அடிக்கடி "ஒரு பொல்லாப்புமில்லை" என்று கூறிக்கொண்டே இருந்தார். கேட்போர் யாவரும் அதனைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்து உண்மையை உணரச் செய்வதற்காகவே இப்படி திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார் என்று ஊகிக்க முடிகிறது. அதைவிடுத்து "இப்படிச் செய்", "இப்படிச் செய்யாதே" என்று அவர் கூறவில்லை. இதனை யோகர் சுவாமிகள் மேல் வருமாறு எடுத்துரைக்கிறார்.

ஒரு பொல்லாப்பு மில்லை யுணர்வீரே
ஓம் சிவாயநம வெனத் தொழுவீரே
உருகி உருகி இன்பம் பெறுவீரே
உறுதி மொழியிதனை அறிவீரே (நற். சிந. 709)

தான் ஆன்மா என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்தி வாழ்வினை நடத்த வேண்டும். ஒருவிதத்திலும் மயங்கக் கூடாது. இவ்வுடம்பை எடுத்த அன்றே பிராரத்தப்படி எல்லாம் நியதியாயிற்று. நோய் எல்லாம் அப்படியே. ஆகவே இந்த நோய் ஏன் வந்தது என்று விசாரிக்க வேண்டியதில்லை. எங்கள் செயலாவது யாதொன்றுமில்லை. எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். வினை போகும், வினையோடு வந்த உடல் போகும், எமக்கென்ன? என்று கூறுவார் சுவாமிகள். மேலும் ஏனிந்த நோய் வந்தது என்றதன் காரணத்தை அறிந்தவர்கள் தொலைகிறது கன்மம் என்று சும்மா இருப்பர். அறியாதவர் மிகவும் ஆத்திரமும் துக்கமும் படுவர். எப்போதும் தன்னை உள்ளே ஆராய்ந்து கொள்ள வேண்டும். வேலையை வேலைக்காக செய்ய வேண்டும். கடவுளும் யானும் பிரிப்பின்றி உள்ளவர்கள். ஆகவே இவ்வுடலை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இது அவர் உறையும் கோயில். பகவத்கீதை சேஷத்திர சேஷத்திரக்ஞ உறவு பற்றிப் பேசுவது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. கடவுள் உன்னுள் உறைந்திருக்கின்றார் என்று உணரும் வரையுமே அறியாமை நிலைக்கின்றது. உடல் உன் வசிப்பிடம் நீ இறைவனின் வசிப்பிடம். உன்னுள் உறையும் பரம்பொருளைக் கண்டனுபவிக்க உறுதியான உடலும் தூய்மையான உள்ளமும் வேண்டும். அகத்திலும் புறத்திலும் இறைவனைக் காண்பவனே சமர்த்தன். நல்வினை தீவினைகளை அனுபவிக்க அனுகூலமான கருவியே உடல். மனதை இறைவனில் இலயிக்கச் செய்வாயாக. “பதியே பசுவாகவும், பாசமாகவும் ஆயது” என்று செல்லப்பர் கூறியிருக்கிறார். (பக். 56) “கடவுள் ஏகனுமல்லன், அநேகனுமல்லன். நன்றே வரினும் தீதே வரினும் யான் ஒன்றையும் அறியேன். சன்மார்க்கம் ஒன்றே நானறிந்த நன்மார்க்கம். சத்தியமாய்ச் சொல்கிறேன் சர்வமும் இதுவே. இதுவே உன்னையறிய வழி” (மட்டக்களப்பு செங்கலடி, சிவத்தொண்டன்

நிலையத்தில் தொண்டாற்றிய ஸ்ரீமத் கந்தசாமி அவர்களுக்கு யோகர் சுவாமிகள் ஆங்கிலத்திற் கூறிய விடயங்களின் தமிழாக்கத்திலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள்).

"ஒருவனே தெய்வமெனும் உண்மைதனைச் சொல்லிவைத்த
குருபரனை மறப்பேனோ – குதம்பாய்" (170)

"உள்ளபடி உள்ளது: எப்பவோ முடிந்த காரியம்: எல்லாஞ் சிவன் செயல்: எங்கும் அவனடி: எல்லாம் அவனடி: குருமுதல் ஒருவனே: ஒருவனே குருபரனாக எழுந்தருளி இந்த உண்மையைத் தந்தவன். அவனை மறப்பேனோ. மேலும் இணையடி வாழ்க" (36) என்ற பாடற்தொகுதியில்

"திங்களும் கங்கையும் சென்னியிற் றாங்கிய
எங்கள் பெருமானே இணையடி வாழ்க
ஒரு பொல்லாப்பு மில்லையென் றோதிய
குருபரன் குஞ்சித பாதம் வாழ்க
நாமறியோம் எனும் நல்ல திருமொழி
தாமறிவோனிச் சகத்தினில் வாழ்க
எப்பவோ முடிவானதென் றெங்கட்குச்
செப்பிய வாசகம் சிறப்புடன் வாழ்க
ஆரறிவாரெனும் அருமைத் திருமொழி
தாரணி தன்னிற் சந்ததம் வாழ்க
முழுதுமுண் மையென முனிவன் சொன்னமொழி
தொழுது வாழ்த்தும் சுதந்திரம் வாழ்க
இன்ன தன்மைய னிவனென ஏவரும்
என்று மறியா இணையடி வாழ்க
முந்திய பொருட் கெலா முதலா யுள்ளோன்
சிந்தையிற் பூத்த சிவபிரான் வாழ்கவே"

நாவுக்கரசரது பாடல் ஒன்றில் "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என எழுதிக் காட்டொணாதே" என்று பாடப்பட்டமை ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

**சைவசித்தாந்த தத்துவம்**

சைவசித்தாந்தம் என்பது தமிழ் மக்களின் தனித்துவமான தத்துவக் கொள்கையாகும். சைவசித்தாந்தக் கோட்பாட்டின் அடிப்படை ஆதாரநூல்களாக அமைபவை மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்காகும். இந்நூல்கள் அனைத்திலும் மெய்கண்ட சாஸ்திரங்களுள் முதல் நூலாக விளங்குவது மெய்கண்ட தேவரினால் இயற்றப்பட்ட சிவஞானபோதமாகும். முதன் நூலாக சிவஞானபோதம் கொள்ளப்பட்டாலும் பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களும் ஆதாரமாயமைந்தாலும் சைவசித்தாந்த மெய்யியலின் தொடக்கத்தை திருமூலரின் திருமந்திரத்திலேயே காணலாம் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எடுகோளுண்மையாகும். திருமூலருக்கு முன் தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் சைவசித்தாந்த நூல் இல்லை என்றே கூறப்படுகின்றது. (இராச மாணிக்கனார்: பக்.95).
பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களிலும் சைவசித்தாந்த மெய்யியல் ஒரு வரன்முறைக்குட்பட்ட முறைமையியல் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை. ஆயினும் பண்டைக்காலந்தொட்டு வளர்ந்து வந்த சமய வழிபாட்டு மரபுகள் அக வழிபாடாக வளர்ந்துவந்த நிலையில் திருமந்திரம் தோன்றியுள்ளது. திருமந்திரம் ஒவ்வொரு தந்திரத்திலும் மந்திரம், தியானம், யோகம் போன்ற வழிபாடுகளை விளக்குவதோடு அதன்வழி பெறப்படும் உயர்ந்த அனுபவமான இறை அனுபவத்தை வற்புறுத்துகிறது. (அருணாசலம்: 1978, பக். 351) சைவ சித்தாந்தம் எனும் தொடரே திருமந்திரத்திற் (1422-23) காணப்படுகிறது. திருமூலர் காலத்திலேயே இச்சிந்தனாநெறி ஒரு

எண்ணக்கருவாக வளர்ந்து வந்துள்ளதை திருமந்திரம் எடுத்துக் காட்டுகிறது.

சைவ சித்தாந்தக் கொள்கைப்படி முப்பொருள் உண்மை முக்கியத்துவம் பெறுகிறது. அவை பதி, பசு, பாசம் எனப்படும். இம்முப்பொருள் உண்மையை சித்தர்களுக்கெல்லாம் தலைவரான திருமூலரது திருமந்திரம் ஒரு பாடலிலேயே (1159) அழகுற எடுத்துரைக்கின்றது.

> "பதி பசு பாசம் எனப் பகர் மூன்றிற்
> பதியினைப் போல் பசு பாசம் அநாதி
> பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
> பதி அணுகிற் பசு பாசம் நிலாவே"

அதாவது பதி, பசு, பாசம் எனும் முப்பொருட்களிற் பதியைப் போன்று பசு, பாசமும் அநாதியானவை. பதியினைப் பாசங்கள் அணுக முடியாது. பசுவும் பசுத்துவம் உள்ளவரைக்கும் பதியை அணுக முடியாது. என்று ஆன்மாக்கள் பதியோடு சேர்கின்றனவோ அன்றிலிருந்து பாசங்கள் நீங்கிவிடும். பதியாகிய இறைவன் அநாதியாகவே பாசங்களில் இருந்து நீங்கியவன் என்பதனால் நிர்மலன் என்று அழைக்கப்படுகிறான்.

தமிழக வரலாற்றில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் முதன்மை பெற்றிருந்த பக்தி இயக்கம் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் சைவசித்தாந்தமும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. அவைதீக மதங்களை மறுப்பதோடு வைதீக மதங்களுக்குள்ளும் தனது மேலாண்மையை நிலைநிறுத்தியது. இத்தகைய ஒரு கருத்து நிலை வளர்வதற்கான ஒரு சூழ்நிலை சோழர்காலப் பகுதியில் நன்கு அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சைவசித்தாந்த சாஸ்திரங்கள் தோன்றிய

காலப்பின்னணியை நோக்கும் போது தமிழ் நாட்டின் சைவப் பாரம்பரியம் தனது மரபுகளை இறுக்கமாகப் பேணுவதற்கான தத்துவ விழுதுகளை விடுவதற்கான சூழல் ஏற்பட்டிருந்தமையை அவதானிக்கலாம் (சிவத்தம்பி, 1999, பக்.134)

சைவசித்தாந்த தத்துவம் அக்காலச் சூழலின் அடிப்படையில் இயல்பாகத் தோன்றியது. பல்லவர் காலப் பக்தி இயக்கத்தைக் கொண்டு நடத்தியவர்களின் வரலாறு 12 ஆம் நூற்றாண்டில் பெரியபுராணம் என்ற காவியமாகத் தோற்றம் பெற்றது. அவர்களாற் பாடப்பட்ட பாடல்கள் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டதுடன் கோயில்களில் ஓதப்படும் தகுதியையும் பெற்றன. இவ்வாறு ஆக்கங்கள், வரலாறுகள் அவற்றினடியாகப் பெறப்படும் கருத்து நிலை ஸ்தாபிதம் பெறுவது இயல்பான ஒன்றேயாகும். பிற்காலத் தமிழகத்தில் பக்தி மரபில் முக்கியத்துவம் பெற்றவரான தாயுமானவருடைய பக்திப் பாடல்கள், அவை வெளிப்படுத்தும் உணர்ச்சி அனுபவங்கள் சித்தர் பாடல்களின் மறைஞானக் கருத்தியலுடன் இணைந்து வருகின்றன. சன்மார்க்கத்தை பக்தி மார்க்கத்துடன் இணைத்தவராக தாயுமானவரைக் காணலாம். ஒரு வகையில் தாயுமானவரே தமிழில் யோகம் பற்றிப் பாடிய மிகச்சிறந்த புலவர் என்பதும் இவர் பேசும் யோகம் என்பது யோகம், தாந்திரீகம், சைவசித்தாந்தம் ஆகியவற்றின் இணைவு என்பதும் குறிப்பிடத்தக்கது (சிவத்தம்பி, 1999, பக்.42) மேலும் தாயுமானவர் சித்தர் மரபினாலும், சித்தாந்த மரபினாலும் போற்றப்பட்டவராகக் காணப்படுகிறார். “வேதாந்த சித்தாந்த சமரச நன்நிலை பெற்ற வித்தகச் சித்தர் கணம்” என்று போற்றுவது குறிப்பிடத்தக்கது.

சைவசித்தாந்திகளின் தத்துவத்தில் ஆன்ம தத்துவங்கள் இருபத்துநான்கினுள் அந்தக் காரணங்கள் நான்கும் இடம் பெறுகின்றன. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

என்பனவாகும். இவற்றுள் சித்தம் என்பது புலன்களுக்குப் புலனாகும் பருப்பொருள் அல்ல. அது ஓர் இடையறா உணர்வு நிலை ஆகும். இவ்வுணர்வோட்டத்தின் விளைவாகவே மனிதர்கள் அறிதல், உணர்தல், ஆய்வு செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட முடிகிறது. மனித இயக்கம் அனைத்திற்கும் இது காரணமாகிறது. அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றின் கூட்டு சித்தம் எனப்படுகின்றது. (நாராயணன், பக்.53) எந்த ஒன்றும் தனித்துச் செயற்பட முடியாத வண்ணம் மூன்றும் கலந்தே செயற்படுகின்றன. சித்தத்தைச் சம நிலையில் வைத்து புற உலகைக் கடந்து இறையின்பத்தை சுவைப்பவர்கள் சித்தர்கள். பத்திரகிரி தமது மெஞ்ஞானப் புலம்பலில் (பாடல் 1) "ஆங்காரத்தை அடக்கி ஐம்புலன்களையும் அவை தொடர்பான தத்துவங்களையும் வேருடன் கட்டறுத்துத் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்" என்று அவாவுவது குறிப்பிடத்தக்கது. அறிவியற் பாங்கில் நிருபிக்கப்படாத ஒரு கருத்தை நம்பி ஏற்பதன் மூலம் பல நூறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்ற போது அத்தகைய நம்பிக்கைகளை ஏற்கத்தான் வேண்டும் என ஜேர்மன் நாட்டு மெய்யியலாளரான இமானுவேல் காண்ட் கூறுவது மிகப் பொருத்தமானதே. சித்தர்கள் கடவுள் உண்மையை ஏற்றுக் கொள்பவர்கள் என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

**சைவசித்தாந்த நோக்கில் யோகர் சுவாமிகள்**

யோகர் சுவாமிகளை சைவசித்தாந்த நோக்கில் அவதானிக்கும் பொழுது அவர் சிவனுடன் அத்வைதமாக இணைந்தவர் என்பது புலனாகும். அவரது நற்சிந்தனைப் பாடல்கள் இதனை உணர்த்துகின்றன. சைவத்தையும் சைவசித்தாந்தத்தையும் பேணி வளர்த்தவராக யோகர் சுவாமிகள் காணப்படுகின்றார். அவர்தம் சமய அனுபவத்தை மேற்கண்டவாறு வெளிப்படுத்துகின்றார்.

"அன்பே சிவமென அறிவார்
அவலம் அவனியில் அடையார்" (நற்.சிந். 524)

"அகத்தூய்மை வேண்டும் உயரைந்தெழுத்தை
நெஞ்சில் உகந்துரைக்க வேண்டும்" (நற்.சிந். 689)

"ஐம்பொறி வழியினிற் செல்லாதிர்
ஐம்புலன் தன்னை வெல்வீரே
வெம்பகை தன்னை விடுவீரே
வேதாந்த சித்தாந்தந் தொடுவீரே" (நற்.சிந். 708)

"அண்ட சராசரம் அவன் திருமேனி
அண்ட சராசரம் அவன் திருஆடல்
அண்ட சராசரம் அவனே ஆகும்
அண்ட சராசரம் முழுதும் அதிசயம்" (நற்.சிந். 105)

இத்தகைய மத அனுபவத்தைப் புறநிலையான மெய்யியல் உரைகல் கொண்டு விளக்கிச், சித்தத்தின் அறிவியலைத் தெளிவுபடுத்தும் பொழுது மதத்தின் மெய்யியற் கோட்பாடுகள் தெளிவுபடும். தமிழில் இதனைச் சைவசித்தாந்தத்திற் காணலாம். யோகர் சுவாமிகளது பாடல்கள் தமிழ் வேதங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் வேதங்கள் வேதாகமச் செல்வாக்கிற்குட்பட்டவை. வேதாகமங்களை விளக்க வந்த திருமூலர் போன்று யோகர் சுவாமிகளும் வேதாகமங்கள், திருமுறைகளின் அடிப்படையில் சாதனை புரிந்தவராவர்.

"குடிமன்னு சாத்தனூர்க்கோக்குலம் மேய்ப்போன் குரம்பை புக்கு
முடிமன்னு கூனற்பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டு என் உச்சி
அடிமன்ன வைத்தபிரான் மூலானாகின்ற அங்கணனே"

என்று சேக்கிழார் திருமூலரைப் போற்றுகின்றார். யோகர் சுவாமிகளும் சிவதொண்டன் நிலையத்தினூடாக வேதாகமங்கள், திருமுறைகளின் அடிப்படையில் சைவசித்தாந்தத்தை வளர்த்தவர் ஆவர். சிவதொண்டன் நிலையத்தில் நாயன்மார் சரிதம் கதாப்பிரசங்கமாகப் பாடப்பட்டதுடன், திருமுறைகள், புராணங்களும் ஓதப்பட்டன. நோய் துன்பங்கள் நீங்கக் கோளறு பதிகம் பாடும்படி சுவாமிகள் கூறுவதோடு கந்தபுராணத்தை ஒழுங்காக முறையாகப் படித்து வந்தால் தமிழர்களைப் பீடித்திருக்கும் இன்னல்கள் எல்லாம் தீருமென்பார்.

யோகரது சித்தானுபவம் என்பது இறைவனோடு தன்னை ஐக்கியப்படுத்தி இரண்டறக் கலந்து இறைமையோடு இறைமையாக ஒன்றிவிடும் தனித்துவமான அனுபவமாகும் .இத்தகைய அனுபவநிலையை நாடுவதே சித்தர்நெறி. சித்தர்நெறி மதங்களோடு இணைத்து பேசப்பட்டமையாற்தான் மக்களும் சித்தர் அனுபவங்களை விளங்கிக்கொண்டனர். ஆனால் சித்தர்கள் பயன்படுத்திய சொற்பிரயோகங்களின் அடிப்படையில் அவர்களை அந்தந்த சமய எல்லைகளுக்குள் அடைத்துவிட முடியாது. எந்த மதத்தையும் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் சாராமல் தனித்து இயங்கும் ஆற்றல் உள்ளவர்களாகவே சித்தர்கள் காணப்பட்டனர். (Encyclopaedia of Americana, Vol.19, p.613). இதனால் சிவஞான சித்தியார் கூறும் கருத்தை இந்த இடத்தில் நோக்கலாம்.

“ஞாலமதில் ஞானநிட்டை உடையோருக்கு நன்மையொடு
தீமையில்லை நாடுவதொன்றில்லைச்
சீலமில்லைத் தவமில்லை விரதமோடாச்சிரமச்
செயலில்லைத் தியானமில்லைச் சித்தமலம் இல்லை
கோலமிலைப் புலனில்லைக் கரணமில்லைக்
குணமில்லை குறியுமில்லைக் குலமும் இல்லை
பாலருடனுன்மத்தர் பசாசர் குணமருவிப்
பாடலினோடாடலிவை பயின்றிடினும் பயில்வர்”

யோகர் சுவாமிகளது சமயக் கொள்கைகளை நோக்கும்போது அவை யாழ்ப்பாணத்தில் மேலாதிக்கம் பெற்றிருந்த சைவசித்தாந்தக் கொள்கை அடிப்படையில் விளக்கப்பட்டிருப பதைக் காணலாம். சித்தானுபவம்பெறத் தத்துவச் சிந்தனை பெரிதும் துணைபுரிகிறது. புற உலகின் பொய்மையை அறிந்து ஒதுக்குவது தத்துவச் சிந்தனையின் விளைவு. ஐம்பொறிகளின் புற உலக அனுபவம் வேறுபாடுகளும், முரண்பாடுகளும் உடையதாக இருக்கிறது. எனவே அவற்றை ஒதுக்கிவிட்டு இறைசிந்தனையிலேயே சித்தர்கள் இருக்கின்றனர். (Encyclopaedia of.Social Sciences, Vol.x1 p.175).

**கடவுள் பற்றிய சிவயோகரது கருத்து.**

முதன் முதலில் எழுதப்பட்ட நற்சிந்தனையில் கடவுள் உயிர்க்குயிர் என்ற கருத்து முன் வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே ஆகையால் நாம் அவருடைய உடைமை. அவருடைய அடிமை. அசை வெல்லாம் அவருடைய அசைவே நாம் ஒருபோதும் அவரை மறந்திருக்க முடியாது. நமக்கு ஒரு குறையுமில்லை. நாம் என்றும் உள்ளோம், எங்குமிருக்கிறோம், எல்லாம் அறிவோம். இப்படியே நாம் இடையறாது சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான இறை தத்துவத்தை அடைய முடியும் என்பது சிவயோகரின் கருத்தாகும்.

யோகர் சுவாமிகள் கூறும் கடவுள் சிவன் என்பதனையும், அச்சிவனே அஞ்சேல் என்று தனை ஆண்டதாகவும் குறிப்பிடுகிறார்.

அஞ்செழுத்துப் பொருளானும் அன்பர்கள் தம் அகத்தானும்
கொஞ்சும் பெண் பாசத்தினாலும் கூன்பிறைச் சென்னியினாலும்
சஞ்சலந் தீர்க்க வல்லாரும் தானே எல்லாம் ஆயினானும்

அஞ்சல் என்று எனை யாண்டானே அதிஅற்புதம் அற்புதந்தானே
அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதும் இல்லை

இத்தகைய பாடல்கள் மூலம் யோகர் சுவாமிகளது சைவசித்தாந்தப் பின்புலம் வெளிப்படுகிறது.

“மங்கையொரு பாகமாய் மருவும் பெருமானே
எங்கள் குலதெய்வமடி – குதம்பாய்” (183)

“அயனும் அரியும் அறியாமல் நின்றவன் தன்
தயவு நமக்குண்டடி – குதம்பாய்” (184)

“அரகர வென்று தினம் அரற்றுஞ் சிவனடியவர்க்கு
மரணம் பிறப்பில்லையடி – குதம்பாய்” (185)

என்று சமய தத்துவக்கருத்துக்களை இலகுவாக வெளிப்படுத்தியுள்ளார். சத், சித், ஆனந்தம் என்ற இயல்புடையது பதி. இம்மூன்று இயல்பும் ஒன்று சேர்ந்தது சச்சிதானந்தம். “சத்” என்பது உள்ளது. “சித்” என்பது சர்வ வியாபகம், பிரகாசம், ஒளி, எல்லாம் அறிவது, ஆனந்தம் என்பது பேரின்பம். இத்தகைய இயல்புகளையுடைய இறைவன் பஞ்சகிருத்தியங்களில் ஈடுபடுபவன் என்பதை யோகர் சுவாமிகள்.

“ஒருவனாலே உலகம் உதித்ததே
ஒருவனாலே உலகம் நிலைத்ததே
ஒருவனாலே உலகம் ஒடுங்கிற்றே
ஒருவனே உறுதி சிவாயவே”

என்று பாடுகிறார். இதனை சிவஞான போதம் முதலாம் சூத்திரம்

“அவன் அவள் அது வெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்பனார் புலவர்”

என்று பதியாகிய இறைவனே உலகத் தோற்றம் ஒடுக்கத்திற்குக் காரணம் என்பதை விளக்கிக் கடவுள் உண்மைக்குப் பிரமாணங் கூறுகிறது. உலகம் ஒருவனாற் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள். அதாவது உலகம் தோற்றிய திதி என்பதையும் உலகத் தோற்றத்திற்கு காரணமான இறைவனே அதன் ஒடுக்கத்திற்கும் காரணமாக உள்ளார் என்பதையும் விளக்கி நிற்கிறது. ஆன்மாக்களை அனாதியாகவே பீடித்த ஆணவமலத்தின் காரணமாக அவை மீண்டும் மீண்டும் பிறந்திறப்பதனால் அவை விடுதலை பெறும் பொருட்டு மாயாமலத்துள் ஒடுங்கிய உலகம் மீண்டும் இறைவனாற் தோற்றுவிக்கப்படுகிறது.

**ஆன்மா பற்றிய சிவயோகரது கருத்து**

ஆன்மா பற்றிய சைவ சித்தாந்தக் கோட்பாட்டை நோக்கின், ஆன்மாவின் உண்மைத் தன்மை இயல்புகள், இலக்கணம், இலட்சியமாகிய மோட்சம் (விடுதலை) அத்தகைய மோட்சத்தைப் பெறுவதற்கான வழிகள் என்ற ஒழுங்கமைப்பில் ஆன்மா பற்றிய கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. சைவசித்தாந்திகளின் கொள்கைப்படி ஆன்மாக்கள் இறைவனைப் போன்று அநாதியானவை. எண்ணிக்கையிற் பல. ஒவ்வொரு உடலோடும் ஒவ்வொரு ஆன்மா உண்டு. இதனை சிவஞான போதம் மூன்றாம் சூத்திரம்,

“உளதில தென்றலின் எனதுடல் என்றலின்,
ஐம்புலனொடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின், உணர்த்த உணர்தலின்
மாயாஇயந்திர தனுவினுள் ஆன்மா”

என்று ஆன்ம உண்மைக்குப் பிரமாணங் கூறுகிறது.

யோகர் சுவாமிகளும் 'நல்லைப் பதிக்கரசே' (91) எனும் பாடற்தொகுதியில் (473)

"ஐம்பூதம் நாமல்லவென்று கூவுகுயிலே
ஐம்பொறி நாமல்லவென்று கூவுகுயிலே (417)
ஆன்மாவே நாம் என்று கூவுகுயிலே
அங்கும் இங்கும் பறந்து கூவுகுயிலே (418)
ஆன்மாவை நித்திய மென்றறிய வரந்தந்திடடா
வீண்பாவனை எல்லாம் விலக்கவருள் தாடா"

எனக் கேட்பதையும், பின்னர்
"ஆதியந்தம் ஆன்மாவுக் கில்லையென்ற
சேதி தெரிந்ததடி – குதம்பாய்" (667)

என்று கூறுவதையும் நோக்கலாம். மேலும் யோகர் சுவாமிகள் நல்லுரான் திருவடி எனும் பாடற் தொகுதியில் இடம்பெறும் பாடல் ஒன்றில் (370)

"ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி"

எனக் கூறுவதோடு, "ஆன்மா அறிவு வடிவானது. முப்பத்தாறு தத்துவங்களாலும் கட்டுப்படுத்தப்பட்டது எனவும் ஆன்மா அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கான ஸ்தூலசரீரம் மாயை காரணமாக இறைவனால் கொடுக்கப்பட்டது எனவும் மாயை எனும் தழை நீங்க ஆன்மா அறிவு சொரூபமானதாக விளங்கும் எனவும் கூறுகிறார்.

"கங்கைச் சடை உடைய கடவுளைக் கும்பிட்டாற
பங்கந்தான் வந்திடுமோ (174)
விடத்தை மிடற்றில் வைத்த விமலனருளைப் பெற்றால்
சடத்தின் மேல் ஆசையுண்டோ – குதம்பாய்" (178)

என்று பாடுவதும் குறிப்பிடத்தக்கது.

**பாசம் பற்றிய கருத்து.**

சைவசித்தாந்தம் 36 தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது. இறைவன் மாயையிலிருந்து ஆன்மாக்களுக்குத் தனு, கரண, புவன போகங்களைக் கொடுத்து அவை செய்த கன்மப்பயன்களை அனுபவிக்கச் செய்து அவற்றிலிருந்து ஆன்மாக்களை விடுவித்து ஈடேற்றத்தை அருளுவன்.

"ஆன்மாவே நாமென்னும் அறிவை மறந்ததனால்
வீண்பாவ மாச்சுதடி – குதம்பாய்"

நாம் ஆன்மா, தேகம் அல்ல என்பதை மறந்ததனால் இருவினைக்கும் ஆளாகி பிறப்பிறப்பிற்கு உட்படுகிறோம். நிஷ்காமியகர்மம் ஒன்றே விடுதலைக்கான வழி ஆகும். அதாவது பற்றற்ற செயல் மூலமே ஒருவன் இதனை அடைய முடியும். பகவத்கீதை இதனை கர்மயோகம் என்று சிறப்பித்துக் கூறுவதுடன் கர்மயோகியை ஸ்திதப்பிரக்ஞன்(Stedy minded) என்றும் அழைக்கிறது. யோகர் சுவாமிகள் நற்சிந்தனையில் கண்டபத்து எனும் பாடற்தொகுதியில் (பாடல் 729, 730

"இருவினை யான் மதிமயங்கியிடர்ப்பட்டுக் கிடப்பேனை
கருணையினாலாண்டு கொள்கைக் கடவுளுடன் திருவுளங்
- கொண்டு
அருள்மேனி தாங்கிய வனியிலேவந் தானைத்
திருவாழும் நல்லை நகர்த் தேரடியிற் கண்டேனே
காட்டினிலே காளியுடன் கூத்தாடுங்க ண்ணுதலோன்
நாட்டினிலே ஞானக்குருவாய் நயந்து வந்து
மீட்டானவன் தன் விரையார் மலரடியை
மாட்சிமை சேர் நல்லைத்தேர் மாணடியிற் கண்டேனே"

எனவும் பாடியிருப்பது கவனிக்கத்தக்கது.

மேலும் மோகம் அறுத்தாண்ட முழுமுதல் (728) இறைவன் எனக் கூறுகிறார். ஆசை, மோகம், பற்றுக்களில் இருந்து விடுபடுதலே இறைவனை அடைவதற்குரிய வழியென்பது உணரப்படும்.

திருமூலரும் (2570)

“ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயிலும் ஆசை அறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தமாகுமே”

என்று ஆன்மாக்கள் பேரின்பத்தைப் பெற வழிகாட்டுகிறார்.

“பொறிவழியே போயலையும்
பொல்லா மனத்தை வேன்றால
அறிவறிவாமை யெல்லாம் - கிளியே
அப்பொழுதே மாய்ந்துவிடும்”

தியான யோகத்தில் முன்னேற விரும்புகிற முனிவனுக்கு கர்மம் உபாயமாகிறது. நிலையான சித்தியடைந்தவனுக்கோ செயலற்றிருப்பது உபாயமாகிறது. (கீதை 6:3)

நிஷ்மாகிய கர்மமே மோட்சத்திற்கு வழியாகும்.

“தன்னை யறிந்தோர்க்குத் தாழ்வுண்டோ வையகத்தில் (180)

நாமும் நாமாகி நமக்குள்ளும் நாமானால்
போம் முன்வினை யனைத்தும் - குதம்பாய் (181)

நமனும் அணுகுவானோ நாதனை நாம் பணிந்தால்
சமனாக நின்றிடடி – குதம்பாய்” (177)

சைவசித்தாந்திகளது கொள்கைப்படி அநாதியாகவே ஆன்மாக்கள் ஆணவ மலத்துடன் தொடர்புடையனவாய் இருப்பதனால் அறியாமைக்குட்படுகின்றன. சிற்றறிவுடைய ஆன்மாக்கள் தம்மை அறியாது உடலோடும், உலகோடும் கூடிவாழ்கின்ற வாழ்க்கையானது பாசங்களும் பற்றுக்களும் நிறைந்தது. யோகர் சுவாமிகளது நற்சிந்தனை (கண்டபத்து 728) யில் தாம் உடலே ஆன்மா என்று மயங்கித் திரிந்தமைபற்றிக் கூறுகிறார். "தேகமே மெய்யென்று சிதடனாய்த் திரிவேனை" எனவும் இருவினையா மதிமயங்கி யிடர்ப்பட்டுக் கிடப்பேனை" (கண்டபத்து 729) எனவும் பாடுகிறார்.

## யோகர் சுவாமிகளின் சைவ வாழ்க்கையும் தொண்டும்

சிவயோகர் சித்தர் மரபில் வந்தவராயினும் வேதாகம நெறிகளைப் பேணிப் பாதுகாத்தவர். இருமரபும் அவர்களிடம் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சித்தாந்த சாஸ்திரங்களை சைவர்கள் முறையாகக் கற்க வேண்டுமென்ற விருப்பமுடையவராக சுவாமிகள் இருந்ததுடன் வண்ணார் பண்ணையிலும் பின்னர் ஏழாலையிலும் மெய்கண்ட சாஸ்திர வகுப்புக்களை ஐ.பொன்னையா (ஏழாலை வைத்தியர்) மூலம் நடாத்தினார். கோயில்களிலும் மடங்களிலும் புராண படலம் இடம்பெற வேண்டும் என்பதில் ஈடுபாடுடையவராக இருந்து வந்தார். தேவாரம், திருவாசகம், திருமந்திரம், அருணகிரிநாதர் பாடல்கள், தாயுமானவர், பட்டினத்தார் பாடல்கள், சித்தர் பாடல்கள், ஒளவையார் பாடல்கள் முதலியவற்றை மனப்பாடஞ் செய்தவராவர். மகாசிவராத்திரியையும் பல அன்பர்களுடனும், பத்தர்களுடனும் கூடி நடத்தி வந்தார். சுவாமிகளைப் பொறுத்தமட்டில் ஆன்மீக விடயங்கள் பக்குவமுடையோர்க்கே போதிக்கப்படுதல் வேண்டும். கந்தபுராணக் கதையை குமாரசுவாமிப் புலவரைக் கொண்டு எழுதுவித்து வெளியிடச் செய்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

யோகர் சுவாமிகளின் தொண்டுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது சிவ தொண்டன் பத்திரிகையின் தோற்றத்திற்கு வழிவகுத்ததாகும். பவ வருஷம் மார்கழி மாதத்தில் (1935 ஜனவரி) முதல் இதழ் வெளிவந்தது. சிவதொண்டன் முதல் இதழில் சுவாமிகளின் கட்டளைப்படி நாம் யார்? என்னும் பொருள் பற்றிய தலையங்கம் இதழ் ஆசிரியர் க.சி. நடராசனால் எழுதப்பட்டது. இரண்டாவது இதழில் இருந்து யோகர் சுவாமிகளின் ஆணைப்படி ஆசிரியர் செ.மயில்வாகனம் அவர்கள் மகாவாக்கியங்களுக்கு விளக்கம் எழுதி வந்தார்கள். பத்திரிகை சம்பந்தமான பல விஷயங்களைச் சுவாமிகளே கவனித்து வந்தார். 1939 இல் சுவாமிகள் சிவதொண்டனில் எழுதிய வாழ்த்தில் இருந்து சிவதொண்டனின் தோற்றம் அதன் இலட்சியம் பற்றி அறிந்து கொள்ளலாம்.

> "ஓம் எனுந் தாரகம் ஓண்முடி சுமந்து
> நாமெலாஞ் சிவனடியாரென நவின்று
> ஆரறிவாரென ஆசான் தந்த
> சீரிய மந்திரம் சிந்தையிற் செபித்து
> சிவ நெறி வழுவாச் சிவ தொண்டர் என்பவன்
> பவ வருடத்துப் பன்னுமார் கழிமதி
> எவரு முவப்ப யாழ்ப்பாணத்தில்
> வண்ணை மாநகர் வைத்தியநாதன்
> தன்னருனாலே தானவதரித்தான்"

சுவாமிகளின் நற்சிந்தனைகள் சிவ தொண்டனிலேயே வெளிவந்தன என்பது கவனிக்கத் தக்கது.

சிவனடிக்கன்பு செய் அனைத்துமே சிவமே என்ற கருத்தினை யோகர் சுவாமிகளின் பாடல் ஒன்று எடுத்துரைக்கின்றது.

> "சிவனடிக் கன்பே சிவயோகமாகும்
> சிவனடிக் கன்பே சிவஞானமாகும்
> சிவனடிக் கன்பே சிவபோகமாகும்
> சிவனடிக் கன்பே சிவமயமாகும்"

நிஷ்மாகிய கர்மமே ஆன்ம ஈடேற்றத்திற்குப் பிரதானம். துன்பங்களையே இன்பமாகக் கொள்ளவேண்டும். சிற்றின்பத்தை இறைவனிடம் படைத்தல் வேண்டும். உணவை இறைவனுக்குப் படைத்துப் பின் அவனுடைய பிரசாதமாக உண்ணுதல் போலவே கர்ம இந்திரியங்கள் தொழில்புரிய வேண்டும் என்று யோகர் சுவாமிகள் வலியுறுத்தியுள்ளார்.

## முடிவுரை

இவ்வாறு யோகர் சுவாமிகளது மகாவாக்கிய விளக்கங்கள் நற்சிந்தனை வெளிப்படுத்திய போதனைகள், தத்துவச் சிந்தனைகள் யாவும். அவரை ஓர் ஆழ்ந்த சைவப்பற்றாளராகவும், சைவசித்தாந்த தத்துவ மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்தவராகவும் வெளிப்படுத்தி நிற்கின்றன. திருமந்திர ஆசிரியர் திருமூலர் சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்ததுபோல் யோகர் சுவாமிகளும் சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சிக்கு முழுமையான பங்களிப்புச் செய்துள்ளார் என்றே கூறவேண்டும். அவரை ஒரு சமய சமரச ஞானியாகக் கொள்வதோடு அவரை சைவசித்தாந்தியாகவும் நோக்க முடிகிறது.

**உஷாத்துணை நூல்கள்.**


1. அருணாசலம்,மு (1978) நற்சிந்தனை, ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.
2. சிவத்தம்பி,கா, (1999) மதமும் கவிதையும்.
3. நாராயணன்,க, (1988) சித்தர்தத்துவம், மாரிபதிப்பகம், கொட்டுப்பாளையம், புதுச்சேரி 8.
4. செல்லத்துரை,அ, (1993) யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள் அருள்மொழிகள், செட்டியார் பதிப்பகம் யாழ்ப்பாணம்.
5. திருமூலர் திருமந்திரம் (1968), திருப்பனந்தாள் காசிமட வெளியீடு, ஸ்ரீவைகுண்டம்.



பேராசிரியர். (திருமதி) ஏ.என்.கிருஷ்ணவேணி, (M.A., M.Phil., Ph.D) அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைப் பேராசிரியராகப் பணி ஆற்றுவதுடன் அத்துறையின் தலைவராக 2006ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மே மாதம் 2017ம் ஆண்டு வரை பதவி வகித்துள்ளார். களனிப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்தைச் சிறப்புப் பாடமாகவும் தொல்பொருளியலைத் துணைப்பாடமாகவும் கொண்டு சிறப்புப் பட்டம் (1974-1978) பெற்ற இவர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் இராதாகிருஷ்ணன் தத்துவமையத்தில் மெய்யியலில் தனது முதுகலைமாணி, முது தத்துவமாணிப் பட்டங்களை (1985-1989) பெற்றவர். மெய்யியலில் அழகியலைச் சிறப்புப் பிரிவாகக் கற்றுத் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தவர். குறிப்பாக இவர் வடமொழி, தமிழ் இலக்கிய மரபை அடிப்படையாகக் கொண்ட இரசக் கோட்பாடு பற்றிய ஆய்வில் ஈடுபட்டுத் தம் கலாநிதிப் பட்டத்தைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் (1997-2001) பெற்றவர்.

அழகியலைத் தனது சிறப்புத்துறையாகக் கொண்டு கலை, அழகியல், தத்துவம், சமயம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டுள்ளார். மலேயாப் பல்கலைக்கழகமும், திருமுருகன், திருவாக்கு திருப்பீடமும் இணைந்து நடாத்திய முருக பக்திக் கருத்தரங்கில் (2012) கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இவர் இந்திய அழகியல், பக்தியும் கலைகளும், சைவசித்தாந்தம், தமிழ் அழகியல் போன்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

Guru Printers - Thirunelvely.
021 222 8266